பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 09 வியாழக்கிழமை 23.06.2022 கதிர் 121

## அமரகீர்த்தி கொலை; மேலும் ஒருவர் கைது

### இதுவரை 32 பேர் சிக்கினர்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொலனன்றுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில்

☞2

## பாம்புக் கடிக்கு மருந்தின்றி 20 பேர் பரிதாப உயிரிழப்பு

### அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் வைத்தியர்; அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடாம்



பாம்பு விஷத்தை முறியடிப்பதற்கான தடுப்புகள் மருந்து இல்லாமையால் இதுவரையில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கிஷாந்த தசநாயக்க தெரிவித்தார்.

அடுத்த மூன்று வாரங்களுக்குள் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில மருந்துகளுக்குத் தற்போது பயன்படுத்தப்படும் மாற்று மருந்துகளும் அடுத்த 3

☞2



## யாழில் பிரதேச செயலர்களின் திடீர் முடிவுகளால் குழப்பங்கள்

### அறிவித்தல்களும் கிழித்தெறியப்பட்டன

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதேச செயலங்களின் பிரதேச செயலர்களின் திடீர் அறிவிப்புக்களால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காகப் மக்கள் பல மணி நேரம்

☞2

# நிலைமையை நேரில் ஆராய வந்தது இந்தியத் தூதுக் குழு





கோட்டா, ரணிலுடன் முக்கிய பேச்சு



**கொழும்பு, ஜீன் 23**

இலங்கையை இன்று வந்தடைந்த இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் குவாத்ரா தலைமையிலான விசேட தூதுக் குழுவினருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பு - கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இன்று முற்பகல் 10.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

☞2

## வவுனியா விபத்தில் ஒருவர் பலி

(வவுனியா நிருபர்)

வவுனியா - நொச்சுமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். அத்துடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

பறனட்டகல் கிராமத்தைச் சேர்ந்த நபர் தனது மைத்துநருடன் அறுவடை இயந்திரத்துக்கு எரிபொருள்பெறுவதற்காக குறித்த இயந்திரத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு மோட்டார் சைக்கிளில்

☞2



## ஹிருணிகாவை அவமதிக்கும் புகைப்படத்தை வெளியிடாதீர்!

### சமூக வலைத்தளப் பாவனையாளர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர, தனது வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது எடுக்கப்பட்ட அவரை அவமதிக்கும் வகையிலான படங்களை வெளியிட வேண்டாம்

☞2

## பெற்றோல் கப்பல் நாளையே வருமாம்

### அமைச்சர் காஞ்சன 'டுவிட்'



இன்று காலை நாட்டை வந்தடையவிருந்த 40 ஆயிரம் மெற்றிக் தொன் ஒக்டேன் 92 ரக பெற்றோலுடனான எரிபொருள் தாங்கி கப்பல், நாளைய தினமே நாட்டை வந்தடையும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றின் ஊடாக அவர் இதனை அறிவித்துள்ளார்.

எனவே, நாடளாவிய ரீதியில் இன்று மற்றும் நாளைய தினங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றோல் விநியோகம் இடம்பெறும் என்றும் அவர்

☞2

## பெற்றோல் வரிசையில் காத்திருந்த குடும்பஸ்தர் லொறி மோதி மரணம்

களுத்துறை மாவட்டம், மத்துகம - அகலவத்தை எரிபொருள் நிலையத்தில் தமது மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோலைப் பெற்றுக் கொள்வதற்காக மூன்று நாள்களாகக் காத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லொறி ஒன்று மோதியதில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த குறித்த நபர் பலியாகியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் பதுரலியவைச் சேர்ந்த 55 வயதான இத்தகொட ஹேவகே ஜகத் என்பவரே உயிரிழந்துள்ளார்.

பதுரலியவில் இருந்து அகலவத்தை நோக்கிப் பயணித்த லொறி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸுடன் மோதிய 4 பேர் கைது



எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீகஹதென்ன மற்றும் நிக்கவெரட்டிய பகுதிகளில் உள்ள எரிபொருள் நிலையங்களில்

☞2

## வவுனியா விபத்தில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே விபத்து ஏற்பட்டுள்ளது.

வீட்டுக்கு வந்துகொண்டிருந்தவர்களை அதே திசையில் பயணித்த கார் மோதியதில் 42 வயதுடைய பாலகிருஷ்ணன் என்ற நபர் பலியானதுடன் அவரின் மைத்துநர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், விபத்து ஏற்படுத்திய கார் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் ஓமந்தைப் பொலிஸார் காரின் இலக்கத்தை அறிந்து குறித்த காரைக் கைப்பற்றி ஓமந்தைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஹிருணிகாவை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமூக வலைத்தளப் பாவனையாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒழுக்கமான சமுதாயத்தில் தாய்மை அவமதிக்கப்படக் கூடாது என்றும், தாய்மை என்ற கருத்து மதிக்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அமைப்பினர் நேற்று பிரதமருக்கு எதிராக அவரின் வீட்டுக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட சில படங்கள் தவறான வகையில் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துக் கூறும்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஹிருணிகா அரசியல் போராட்டத்துக்காக வந்திருந்தார். அவரது தாய்மையை அவமதிக்கும் வகையில் யாரும் நடந்துகொள்ளக் கூடாது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனது பேஸ்புக் பக்கத்தில் குறித்த படங்கள் தொடர்பில் குறிப்பிட்டுள்ள ஹிருணிகா பிரேமச்சந்திர, மூன்று அழகிய குழந்தைகளுக்கு நான் தாய்ப்பால் ஊட்டியுள்ளேன். நான் அவர்களை வளர்த்து, அவர்களுக்கு சௌகரியமளித்து, எனது ஒட்டுமொத்த உடலையும் அவர்களுக்காக அர்ப்பணித்தேன். பொலிஸாருடனான கைகலப்பு காரணமாக வெளித்தோன்றிய எனது மார்பகங்களை வைத்து கிண்டலும் கேலியும் செய்பவர்கள், தாம் குழந்தைகளாக இருக்கும்போது தமது தாய்மார்களின் மார்பகக் காம்புகளிலிருந்து தாய்ப்பால் அருந்தியவராகவே இருப்பர். எனது மார்பகங்களைப் பற்றி நீங்கள் கதைத்து, மீம்ஸ்களை உருவாக்கி, நகைத்து இருக்கும்போது, எங்கோ ஒரு வரிசையில் இந்தத் தேசத்தின் ஒரு குடிமகன் இறந்திருப்பான் - என்று தெரிவித்துள்ளார்.

## பெற்றோல் கப்பல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, போதியளவு ஒட்டோ டீசல் கையிருப்பில் உள்ளது என்றும், நாடளாவிய ரீதியில் முழுமையாக டீசல் விநியோகம் இடம்பெற்று வருகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுப்பர் டீசல் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நாடு பூராகவும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக பகலிரவாக பொதுமக்கள் தொடர்ந்து வாகனங்களுடன் வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

சிலஎரிபொருள்நிரப்புநிலையங்களில் பல நாள்கள் காத்திருந்து இன்னும் எரிபொருள் கிடைக்காத சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

## எரிபொருள் நிரப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்குக் குறித்த சந்தேகநபர்கள் இடையூறு விளைவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

## பாம்புக் கடிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரங்களுக்குள் மருத்துவமனை களஞ்சியங்களில் இருந்து படிப்படியாக குறைவடையவுள்ளது என்றும் அவர் கூறினார்.

வைத்தியசாலை களஞ்சியங்களில் இருந்து 20 வீதமே மருந்துகள் வழங்கப்படுகின்றன என்றும், அவையும் எதிர் வரும் காலங்களில் நிறைவடையவுள்ளன என்றும் மருத்துவர் கிஷாந்த தசநாயக்க சுட்டிக்காட்டினார்.

தற்போது வைத்தியசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு மாத்திரமே மருந்துகள் வழங்கப்படுகின்றன என்றும், வயதான நோயாளிகளை விட இளம் நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழில் பிரதேச ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட வரிசைகளில் காத்திருந்த வேளை, நல்லூர் பிரதேச செயலர், தமது பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்க வேண்டும் என எரிபொருள் நிரப்பு நிலையத்தினருக்குப் பணித்திருந்தார். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கு நேற்று திருநெல்வேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையிலும், இன்றையதினமும் கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கு ஒதுக்கியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

அதேவேளை, கோப்பாய் பிரதேச செயலகத்தினரால் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்த வேளை, குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்குத் தான் எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டப்பட்டமையால் குழப்பம் ஏற்பட்டது. இதன்போது அங்கு ஒட்டப்பட்டிருந்த அறிவித்தல்களையும் மக்கள் கிழித்தெறிந்தனர்.

அதேவேளை, நேற்றைய தினமே ஊர்காவற்துறை மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகங்களால் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அறிவிக்கப்பட்டமையால், அவ்விரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் குழப்பங்கள் இன்றி எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

பிரதேச செயலர்களின் திடீர் அறிவிப்புக்களே குழப்பங்கள் ஏற்படக் காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமரகீர்த்தி கொலை: ......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இன்று தெரிவித்துள்ளது.

கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும், அவரை அத்தனகல்ல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் கொலைச் சம்பவம் தொடர்பில் இதுவரை 32 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## நிலைமையை நேரில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் குவாத்ரா, இந்திய பிரதான பொருளாதார ஆலோசகர் வீ. ஆனந்த் நாகேஸ்வரன் மற்றும் இந்திய பொருளாதார அலுவல்கள் திணைக்களத்தின் செயலாளர் உள்ளிட்ட விசேட தூதுக் குழுவினர், இந்திய விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானத்தினூடாக இன்று முற்பகல் 9.20 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதையடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை அவர்கள் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் குறுகிய கால மற்றும் நீண்ட கால உதவித் தேவைகள் குறித்து தூதுக் குழுவினர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர் என்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடனான பேச்சின் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்த இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் குவாத்ரா உள்ளிட்ட விசேட தூதுக் குழுவினர், அவருடனும் இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பில் கலந்துரையாடினர்.

மேற்படி இரு சந்திப்புக்களிலும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேவும் கலந்துகொண்டார்.

இந்தியாவிடம் 500 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக இலங்கை கோரியுள்ள நிலையில், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் நேரில் ஆராய இந்திய விசேட தூதுக் குழுவினர் கொழும்பு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத்
தொடர்புகளுக்கு –
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நீதி, நியாயம் எங்கே?

வரும் கொஞ்ச நஞ்ச எரிபொருளை மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் விவகாரம் இலங்கை முழுவதும் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றது. ஆங்காங்கே நடைபெறும் சம்பவங்களைப் பார்த்தால் அவை பெரும் இரத்தக்களறிகளுக்கு வழி செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தோன்றுகின்றது.

நாட்டுக்கு இந்த மோசமான நிலைமையை ஏற்படுத்திய ஆட்சித் தலைமையை விட, இந்த விவகாரத்துக்குள் தலையை நுழைத்து, பெரும் குளறுபடி பண்ணிக் கொண்டிருக்கும் அரச நிர்வாக அதிகாரிகள் மீதுதான் மக்களின் கோபம் அதிகம் திரும்பி இருக்கின்றது. அவ்வளவு தூரம் அதிகாரவர்க்கத்தின் குசும்பு மேலோங்கியுள்ளது.

நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, அது நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும். மக்களுக்கு திருப்தி ஏற்படும் விதத்தில் அது முன்னெடுக்கப்பட வேண்டும். அரச அதிகாரிகள் அதில் கவனம் செலுத்துகின்றனரா என்பதுதான் கேள்வி. அவர்கள் பெரும்பாலும் பதவிக் கதிரையின் திமிரில் எதேச்சதிகாரமாகவே செயல்படுகிறார்கள் என்று மக்கள் கருதும் நிலையே தொடர்கிறது.

நாட்டின் அரசு ஊழியர்கள் என்பவர்கள் அரச நிர்வாகத்துக்குமுக்கியமானவர்கள் என்பது உண்மைதான். மறுபுறத்தில் அவர்கள் அரசால் அதிகமாக போஷிக்கப்படுகின்றார்கள் என்பதும் மறுக்கக் கூடியதல்ல. வேலை நடந்ததோ, நடக்கவில்லையோ மாதச் சம்பளமும் ஏனைய பவிசுகளும் சுளையாக மாதம் தவறாமல் கிட்டும். அரசு புதிதாக நோட்டுக்களை அச்சிட்டாவது சம்பளத்தைக் கொடுத்து விடும்.

தனியார் துறையினர் மற்றும் அரசு ஊழியர்கள் அல்லாத பிற நிலையினர் குறித்து எழுதி விளங்கப்படுத்தத் தேவையில்லை.

சம்பள அதிகரிப்பு கேட்டே வேலைநிறுத்த முஸ்தீபுகளை அறிவித்து, மக்களை நட்டாற்றில் விட எத்தனிக்கும் அரசு ஊழியர்கள், அவர்களின் அமைப்புகள் எல்லாம் இப்போது எரிபொருள் விநியோகம் என்றதும் தமது சேவையின் மகத்துவத்தை எல்லோருக்கும் போதிக்கின்றனர். நல்லது.

எரிபொருள் விநியோகத்தில் அரசு ஊழியருக்கு முன்னுரிமை, விசேட சலுகை, தனி ஏற்பாடு என்ற முடிவை – அதையொட்டிய வழிமுறைகளை – அரசு அதிகாரிகள் எடுக்கும்போது, அது, தங்களையும் உள்ளடக்கிய தரப்புக்கான ஒழுங்கு என்பதால் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் தாங்கள் கவனமாகவும் நீதியாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டியது மிக மிகக் கட்டாயமாகும் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். மற்ற தரப்புகளின் பிரதிநிதிகளை – குறைந்தபட்சம் உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகளையாவது – வைத்து அத்தகைய முடிவுகளை எடுத்து, விடயங்களை வெளிப்படுத்தி, பகிரங்கமாக அறிவித்து, அவற்றில் உள்ள தவறுகளை சரியாக முறையிடுவதற்கும், நீதி பெறுவதற்குமான வாய்ப்புகளை அளித்து, மேற்கொள்ள வேண்டும்.

அரசு ஊழியர்கள் என்ற கணக்கில் தம்மவர்களுக்கு மாவட்ட அரச நிர்வாகம் முன்னுரிமை கொடுத்து செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு பெரும் கோபாவேசமாக எழுந்துள்ளது. இதன் விளைவுகள் விபரீதமாகலாம்.

நீதி நிலைநாட்டப்படுவதாக அரசு உயரதிகாரிகள் வியாக்கியானம் கூறலாம். ஆனால் அது வெளிப்படையாகவும் காட்டப்பட வேண்டும். அது இல்லை என்பதுதான் இங்கு உண்மை.

# அகதிகள் முகாமாக முழுநாடும் மாற்றம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எடுத்துரைப்பு



இலங்கையால் வெளியிடப்பட்ட இறையாண்மை பிணைமுறிக்கு முதலீடு செய்த அமெரிக்க வங்கியொன்று தனது பணத்தையும் வட்டியையும் தரக் கோரி மன்ஹாட்டன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதோடு, இது மிகவும் துரதிஷ்டவசமான நிலை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று முழு நாடும் அகதிகள் முகாமாக மாறியுள்ளதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,அலாவுதீனின் அற்புத விளக்கு போல தன்னிடம் ஓர் அதிசய விளக்குள்ளது என கூறிய பொருளாதார வல்லுநர்களின் உண்மைத் தன்மை இன்று வெளிப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தைப் புறக்கணித்தமை தொடர்பாகப் பிரதமர் கேள்வி எழுப்புகிறார் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தமது தேசியப் பட்டியல் ஆசனத்தை ஓராண்டு காலம் வெற்றிடமாக வைத்துக் கொண்டு, ராஜபக்ஷக்களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்தது பிரதமர் தானேயன்றி, ஐக்கிய மக்கள் சக்தி அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் இன்னல்களை அறியாத தர்ம சங்கடத்துக்குள்ளான அரசாங்கம் நாடாளுமன்றத்தை முட்டாள்தனமான ஓர் இடமாக மாற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று வெளிநாட்டு நீதிமன்றத்திலும் கூட நாடு பிரதிவாதியாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மசகு எண்ணெய் விலைகள் வீழ்ச்சி!

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ப்ரெண்ட் மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 5 அமெரிக்க டொலர் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் தற்போதைய புதிய விலை 109.79 டொலர்களாகப் பதிவாகின்றது.

யு.எஸ். டபிள்யு.ரி.ஐ. மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 5.37 டொலரால் வீழ்ச்சியடைந்து புதிய விலை 104.15 டொலர்களாகப் பதிவாகின்றது.

# யாழ். மாநகர சபை எல்லைக்குள் வாகன தரிப்பிடக் கட்டண அறவீடு

யாழ்ப்பாண மாநகர சபையால் மாநகர எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படும் வீதிகளில் தரித்து நிற்கின்ற வாகனங்களுக்கான வாகன தரிப்பிடக் கட்டணம் அறவிடப்படுகின்ற செயற்பாடு நீண்டகாலமாக நடைபெறும் ஒன்றாகும்.

இந்தக் கட்டண அறவீடு மாநகர சபையின் இறைவரிப் பரிசோதகர்களால் அறவிடப்பட்டு வந்தது. மேற்படி பணிகளை மாநகரசபை ஊழியர்கள் மூலம் மேற்கொள்வதில் சில வசதியீனங்கள் இருந்தமையால் 2022.04.05 ஆம் திகதிய சபையின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், இந்த வருடம் மே மாதம் தொடக்கம் (2022) தனியார் நிறுவனத்தினர் மூலம் கட்டண அறவீடுகள் மேற்கொள்வதற்காக பத்திரிகை மூலம் கேள்விகோரல் விடுக்கப்பட்டு குறித்த ஒரு நிறுவனம் கேள்விகோரலில் தெரிவு செய்யப்பட்டது.

அந்நிறுவனத்தினரால் கீழ்வரும் வீதிகளில் தரித்து நிற்கின்ற வாகனங்களுக்கு கீழ்க் குறிப்பிட்ட கட்டணஅறவீட்டின்அடிப்படையில் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி செயற்பாடுகள் யாழ். மாநகர சபையின் வருமானத்துக்காக மாத்திரமன்றி, யாழ் நகரின் போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், வீதியோர வாகனத் தரிப்புக்களை ஒழுங்குபடுத்துவதற்குமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி செயற்பாட்டால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம். எனினும் மேற்படி செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாநகரசபையினர் கேட்டுள்ளனர்.

**வீதிகளின் விவரம்**

காங்கேசன்துறை வீதி - ரில்கோ சுற்று வட்டத்திலிருந்து மனோகரா திரையரங்கு வரையும், ஆஸ்பத்திரி வீதி - பருத்தித்துறை வீதியிலிருந்து லைடன் காமன்ஸ் சந்தி வரை, கஸ்தூரியார் வீதி - ஆஸ்பத்திரி வீதியிலிருந்து நாவலர் வீதி வரையும், மின்சார நிலைய வீதி முழுமையாக, சி. பொன்னம்பலம் வீதி, வைரவர் கோவில் வீதி, மணிக்கூண்டு வீதி, மகாத்மா காந்தி வீதி, பலாலி வீதி முழுமையாக, ஸ்ரான்லி வீதி முழுமையாக.

**கட்டண அறவீட்டு விவரம்**

சைக்கிள்களுக்கு (ஒரு நாள் முழுவதும்) 10 ரூபாவும், மோட்டார் சைக்கிள்களுக்கு (ஒரு நாள் முழுவதும்) 20 ரூபாவும், ஓட்டோக்களுக்கு (ஒரு நாள் முழுவதும்) 50 ரூபாவும் வான், கார், ஹயேஸ், பட்டா,வடிரகசிறியவாகனங்களுக்கு (மூன்று மணித்தியாலங்கள் மட்டும்) 50 ரூபாவும் லொறி, கன்ரர் மற்றும் பெரிய வாகனங்கள் (மூன்று மணித்தியாலங்கள் மட்டும்) 100 ரூபாவும் அறவிடப்பட உள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆப்கானில் சக்தி வாய்ந்த பூகம்பம் 1,000 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானில் நேற்று ஏற்பட்ட சக்தி வாய்ந்த பூகம்பத்தில் ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். 1,500க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். ஆப்கானிஸ்தானின் பக்திகா மாகாணத்திற்கு உட்பட்ட 4 மாவட்டங்களில் நேற்று காலை சக்தி வாய்ந்த பூகம்பம் தாக்கியது. பாகிஸ்தான் எல்லைக்கு அருகே ஏற்பட்ட இந்த பூகம்பம், ரிக்டர் அளவுகோளில் 6.1 புள்ளிகளாக பதிவானது. கோஸ்வ் என்ற இடத்தில் இருந்து 50 கி.மீ. தொலைவில் 10 கி.மீ ஆழத்தில் இதன் மையம் இருந்தது. கிழக்கு ஆப்கானிஸ்தானின் நகரங்கள், மலைப்பகுதிகளிலும் கூட இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இதனால் வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. இதனால், 4 மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. மேலும், வலுவான கட்டடங்கள் இல்லாத பகுதிகளில் இந்த பூகம்பம் மோசமான சேதங்களை ஏற்படுத்தி உள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணி முழு வீச்சில் நடக்கிறது.

இடிபாடுகளில் சிக்கி காயமடைந்த பலர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதுவரையில் ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். 1,500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

மேலும், மண்ணில் புதைந்தவர்கள், இடிபாடுகளில் சிக்கியவர்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது. மின் மற்றும் செல்போன் கோபுரங்கள் சேதமடைந்துள்ளதால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது இதேபோல், கோஸ்ட் மாகாணத்திலும் பல இடங்களில் பூகம்பம் உணரப்பட்டது.

இப்பகுதியில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். 95 பேர் காயம் அடைந்துள்ளனர். தலிபான்கள் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தான் மீண்டும் சென்ற பிறகு அங்கு ஏற்பட்ட முதல் இயற்கை பேரழிவு இதுவாகும். இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டவர்கள் போர்வையில் வைத்து ஹெலிக்கொப்டர் இருக்கும் இடத்திற்கு தூக்கி செல்லப்படுவதும், காயமடைந்தவர்களுக்கு தரையில் அமர வைத்து சிகிக்சை அளிப்பதும் போன்ற வீடியோக்கள் வெளியாகி சோகத்தை ஏற்படுத்தி உள்ளன. இந்நாட்டில் இந்த நூற்றாண்டில் இல்லாத வகையில் மிக மோசமான பாதிப்புகளை இந்த பூகம்பம் ஏற்படுத்தி உள்ளது. காபூலில் பிரதமர் முகமத் ஹசான் ஹகுந்த் அளித்த பேட்டியில், பூகம்பத்தால் மோசமாக பாதித்துள்ள ஆப்கானிஸ்தானுக்கு சர்வதேச நாடுகளின் உதவியை அளிக்கும்படி தலிபான்கள் கோரியுள்ளனர்.



## ரஷ்யா மீது பொருளாதாரத் தடை; அமெரிக்காவுக்கு சீன அதிபர் கண்டனம்



இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளை உறுப்பினர்களாக கொண்டுள்ள பிரிக்ஸ் அமைப்பின் வர்த்தக மன்ற கூட்டத்தை காணொலி முறையில் சீனா நடத்துகிறது. இதில் தொடக்க உரையாற்றிய சீன அதிபர் ஜின்பிங், உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா மீது பொருளாதார தடை விதித்துள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கண்டனம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறுகையில், ‘பொருளாதாரத் தடைகள் பூமராங் போன்றவை. இருபுறமும் கூர்மையான வாளுக்கு ஒப்பானவை. சர்வதேச நிதி அமைப்புகளில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் உலகப் பொருளாதாரத்தை அரசியலாக்குபவர்கள் மற்றும் வேண்டுமென்றே பொருளாதாரத் தடைகளை விதிப்பவர்கள் இறுதியில் மற்றவர்களுக்கும், தங்களுக்கும் தீங்கு விளைவிப்பார்கள். அத்துடன் உலக மக்களுக்கு பேரழிவுகளை ஏற்படுத்துவார்கள்’ என்று சாடினார். சர்வதேச மேலாதிக்கம், குழு அரசியல் மற்றும் கூட்டு மோதல்கள் அனைத்தும் அமைதியையோ, நிலைத்தன்மையையோ தருவதில்லை எனக்கூறிய ஜின்பிங், மாறாக போரையும், மோதலையுமே ஏற்படுத்துவதை வரலாறு காட்டுவதாகவும் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் புடின், பிரேஸில் அதிபர் போல் சொனாரோ உள்ளிட்டோரும் உரையாற்றுவார்கள் என கூறப்பட்டுள்ளது.

## நீச்சல் குளங்களில் புர்கினி அணியத் தடை பிரான்ஸ் நீதிமன்று அதிரடித் தீர்ப்பு அளித்தது

பிரான்ஸ் நாட்டில் கிரினொபெல் நகரில் பொது நீச்சல் குளங்களை பயன்படுத்த பிகினி என்ற குறிப்பிட்ட உடையை அணிய வேண்டுமென்ற விதி உள்ளது. ஆனால், பொதுநீச்சல் குளங்களை இஸ்லாமிய மத பெண்கள் பயன்படுத்தும் வகையில் புர்கானி என்ற உடையும் அனுமதிக்கப்பட்டது. புர்கானி என்பது பர்தா மற்றும் பிகினி என்ற வார்த்தைகளின் கூட்டு சொல்லாக கூறப்படுகிறது. புர்கினி என்பது உடல் முழுவதையும் மூடி முகம் மட்டும் தெரியும் வகையிலான உடையாகும். இந்த உடைக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். பொது இடங்களில் மத அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த உடை உள்ளதாக எதிர்ப்பு எழுந்தது. இந்த விவகாரம் தொடர்பாக கிரினொபெலில் உள்ள கீழ் நீதிமன்றில் விசாரணை நடைபெற்றது. அதில், பொது நீச்சல் குளங்களில் புர்கினி அணிந்து குளிக்கத் தடை விதித்து நீதிமன்று உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து பிரான்ஸ் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் இன்று தீர்ப்பு வெளியானது. அதில், நாடு முழுவதும் பொது நீச்சல் குளங்களில் புர்கினி அணிய தடை விதித்து சுப்ரீம் கோர்ட்டு அதிரடி உத்தரவு பிறப்பித்தது. அதேபோல், கிரினொபெலில் புர்கினி அணிய விதிக்கப்பட்ட தடை செல்லும் எனவும் நீதிமன்று அதிரடி தீர்ப்பளித்தது.



## வீட்டினுள் புதைந்து கிடந்த ஐந்தாம் நூற்றாண்டு கல்லறை


தென்அமெரிக்க நாடான பெருவில் வீட்டினுள் புதைந்து கிடந்த ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்லறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்து உள்ளனர். கல்லறையில் இருந்த உடலைச் சுற்று சில்வர் மற்றும் தாமிரம் உலோகம் கொண்டு போர்த்தப்பட்டு இருந்ததாகவும், இன்கா பேரரசைச் சேர்ந்த செல்வ செழிப்புடைய குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். வீட்டு பராமரிப்பு பணியின் போது கல்லறை கண்டெடுக்கப்பட்ட நிலையில், சுற்றுவட்டார பகுதிகளில் இன்கா பேரரசின் எச்சங்கள் உள்ளனவா என ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

## கார்கிவில் ரஷ்ய படைகள் குண்டுவீசித் தாக்குதல் 8 வயது குழந்தை உட்பட 15 பேர் உயிரிழப்பு

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவில் ரஷ்ய படைகள் நிகழ்த்திய குண்டுவீச்சு தாக்குதலில் 8 வயது குழந்தை உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர் என உக்ரைன் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கு இடையேயான போர் 5 மாதங்களை நெருங்கி விட்ட நிலையில், கிழக்கு உக்ரைனைக் கைப்பற்றும் முயற்சியில் ஆயிரக்கணக்கான வீரர்களை குவித்து ரஷ்யா கடும் தாக்குதல் நிகழ்த்தி வருகிறது.

இந்நிலையில், வடகிழக்கு உக்ரைனின் நான்கு வெவ்வேறு இடங்களில் நடந்த தாக்குதலில் 15 பேர் உயிரிழந்துள்ள நிலையில், மேலும் 16 பேர் காயமடைந்துள்ளனர் என பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.



# இந்திய ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு பா.ஜ.க. சார்பில் திரௌபதி முர்மு நாளை தாக்கல்



ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் முடிவதால், புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக அடுத்த மாதம் 18 ஆம் திகதி தேர்தல் நடக்கவிருக்கிறது.

இந்தத் தேர்தலுக்கான மத்தியில் ஆளும் பா.ஜ.க. கூட்டணி வேட்பாளராக திரௌபதி முர்மு அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் நாளை நாடாளுமன்ற மாநிலங்களவைச் செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

அப்போது அவருடன் இந்தியப் பிரதமர் மோடி, மத்திய மந்திரிகள், பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உடனிருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரின் வேட்பு மனுவை தலா 50 எம்.பிக்கள் எம்.எல்.ஏக்கள் முன்மொழியவும், வழிமொழியவும் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. திரௌபதி முர்முவின் வேட்புமனுவை பிரதமர் மோடி முதலில் முன்மொழிவார் என தெரிவிக்கப்படுகிறது.

# அசாம் வெள்ளமீட்பு நடவடிக்கைகளில் உதவுமாறு தொண்டர்களுக்கு ராகுல் காந்தி வேண்டுகோள்



அசாமில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவும் ஏற்பட்டு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பிரம்மபுத்திரா மற்றும் பராக் ஆறுகள் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை அடுத்து 32 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இதில் 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 55 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அசாமில் ஏற்பட்ட வெள்ளத்தில் உயிரிழந்தவர்களுக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அசாமில் வரலாறு காணாத வெள்ளத்தை எதிர்கொள்ளும் எங்கள் சகோதர சகோதரிகளுடன் என் எண்ணங்கள் உள்ளன. உயிரிழந்தவர்களை இழந்து வாடும் குடும்பங்களுக்கு இதயபூர்வமான இரங்கல்கள். காங்கிரஸ் தொண்டர்கள் மற்றும் தலைவர்கள் மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று தனது டுவிட்டர் பதிவில் ராகுல் காந்தி குறிப்பிட்டிருக்கிறார்.

# விஜயகாந்த் உடல்நலம் குறித்து பிரதமர் மோடி நலம் விசாரிப்பு

நடிகரும் தே.மு.தி.க. தலைவருமான விஜயகாந்த் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இரத்த ஓட்டம் சீராக இல்லாத காரணத்தால் வலது கால் விரல் நீக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது.

இது தொடர்பாக தே.மு.தி.க. வெளியிட்ட அறிக்கையில், நீண்ட ஆண்டுகளாக இருக்கும் நீரிழிவு பிரச்சினையால்



தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் வலது காலில் உள்ள விரல் பகுதியில் இரத்த ஓட்டம் சீராக இல்லாததால் டாக்டரின் ஆலோசனைப்படி விரல் அகற்றப்பட்டது. மருத்துவர்களின் கண்காணிப்பில் அவர் நலமாக இருக்கிறார். சிகிச்சை முடிந்து ஓரிரு நாள்களில் விஜயகாந்த் வீடு திரும்புவார் என தெரிவிக்கப்பட்டது.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்தின் உடல்நலம் குறித்து அவரது துணைவியாரான பிரேமலதாவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விவரங்களைக் கேட்டறிந்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. விஜயகாந்துக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் பிரதமர் மோடி தொலைபேசி மூலம் கேட்டறிந்துள்ளார் எனவும், விஜயகாந்த் விரைவில் குணமடைந்து ஆரோக்கியமாக வாழ பிரார்த்தனை செய்கிறேன் எனவும் பிரதமர் மோடி தெரிவித்தார் என தே.மு.தி.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தேசிய கல்விக்கொள்கை தமிழ்நாட்டிற்கு தேவையில்லை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் உறுதி



தமிழக அரசின் மாநில கல்விக் கொள்கையை வடிவமைக்க கல்வியாளர்கள், வல்லுனர்கள் அடங்கிய மாநில அளவிலான குழுவை அமைத்து தமிழக அரசு சமீபத்தில் அரசாணை வெளியிட்டிருந்தது. அந்தக் குழுவில் பல்வேறு பேராசிரியர்களும் கல்வியாளர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழு, ஒரு வருடத்தில் கல்விக் கொள்கையை வடிவமைத்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என அந்த அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மதுரையில் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தேசிய கல்விக்கொள்கை வேண்டாம் என்பதற்காகத்தான் மாநிலக் கல்விக் கொள்கை கொண்டுவரப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார். மாணவர்களுக்கு உகந்த, மாநில கல்விக் கொள்கை கொண்டுவரப்படும் என்றும் மாணவச் செல்வங்களுக்கு ஏற்ற கல்வியை முதலமைச்சர் தேர்வு செய்வார் எனவும் அமைச்சர் அன்பில் மகேஷ் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# அ.தி.மு.க. பொதுக்குழு கூட்ட மண்டபத்துக்குள் போலி அனுமதி அட்டைகளோடு நுழைய சிலர் முயற்சி



இன்று நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக பொதுக்குழு உறுப்பினர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். சிறப்பு அழைப்பாளர்களுக்கு இந்த முறை அனுமதி வழங்கப்படவில்லை.

பொதுக்குழு உறுப்பினர்கள் என்ற அடையாளத்துடன் போலியான நபர்கள் புகுந்துவிடக்கூடாது என்பதற்காக பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டு இருந்தது. இரு நாள்களுக்கு முன்பே அவர்களுக்கு படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டது. அத்தோடு, அழைப்பிதழும் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அழைப்பிதழ் மற்றும் அடையாள அட்டையை சரி பார்த்த பின்னரே கூட்டத்துக்கு உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டனர். அப்போது சிலர் போலியான அடையாள அட்டைகளையும் அழைப்பிதழ்களையும் கொண்டு வந்து பொதுக்குழுக் கூட்டத்துக்கு செல்ல முயன்றனர். வாயிலில் நின்றபடி சரி பார்ப்புப் பணியில் ஈடுபட்ட கட்சியின் அலுவர்கள் அதனைக் கண்டுபிடித்து, பொலிஸாரிடம் கையளித்தமையடுத்து, அவ்வாறானவர்களை பொலிஸார் கூட்டத்துக்கு அனுமதிக்காது திருப்பி அனுப்பினர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திருமலை கோமரங்கடவெலவில் சிங்களவர்களின் காணியும் பறிப்பு





தமது காணிகளை அடாத்தாக சுவீகரிப்பதை நிறுத்தி, அந்த சொந்த காணிகளை மீளப் பெற்றுத்தருமாறு கோரி நேற்று திருகோணமலை மாவட்டம், கோமரங்கடவெல பிரதேச செயலகத்துக்கு முன்பாக சிங்களப் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

யுத்த காலத்தின் போது தங்களது விவசாயக் காணிகளை இழந்த நிலையில் உள்ள போது தற்போது வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அதனை அடாத்தாக சுவீகரித்துள்ளனர் என்றும் –

இதனைத் தடுத்தி நிறுத்தி, விவசாயச் செய்கையை மேற்கொள்ள எமதுசொந்தக் காணிகளை பெற்றுத் தாருங்கள் என்றும் –

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட – காணிகளை இழந்த – கோமரங்கடவெல பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வனஜீவராசி திணைக்களத்தினர் பயிர்ச் செய்கைகளைச் செய்ய விடாதும், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடாத வண்ணமும் தடுத்துள்ளனர். இதனால் தங்களது அன்றாட ஜீவனோபாய தொழிலான விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கோமரங்கடவெல பிரதேச செயலாளர் டி.எம்.எஸ்.திசாநாயக்க கலந்துரையாடினார். உரிய தீர்வைப் பெற்றுத் தருகிறோம் என கூறிய பின்னர் அங்கிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# சினை மாட்டைக் காப்பாற்றிய ரயில் சாரதியின் நடவடிக்கை

தண்டவாளத்தின நடுவே செய்வதறியாது நின்றுகொண்டிருந்த சினை மாடொன்றை, ரயில் சாரதி மிகவும் சாதூரியமாக காப்பாற்றிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு – பொலன்னறுவை ரயில் தண்டவாளத்தில், வெலிகந்தைக்கும் அசலபுரைக்கும் இடையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

6479 இலக்கம் கொண்ட ரயில், மாகோவிலிருந்து மட்டக்களப்பு நோக்கி நேற்றுக் காலை பயணித்துக்கொண்டிருந்தது.

அசெலபுர-வெலிகந்த பகுதியில், சினை மாடொன்று தண்டவாளத்தின் நடுவே நின்றுகொண்டிருந்துள்ளது.

எவ்வளவு ஒலி (ஹோரன்) எழுப்பியும் அந்தச் சினைமாடு அசைவதாய் இல்லை. ரயில் சாரதியான ஏ.எச.எம்.சீ.பீ.தீகல மிகவும் முயற்சி எடுத்து சாதூரியமான முறையில் ரயிலை நிறுத்தினார்.

அதன் பின்னர் ரயில் தலைமை காவலர் ஏ.ஜீஎம்.சமீர தலைமையிலான காவலர்கள், ரயிலில் இருந்து இறங்கி மாட்டைத் தண்டவாளத்திருந்து அப்புறப்படுத்திவிட்டனர்.

சாரதி மற்றும் காவலர்களின் செயற்பாட்டால், மாடு மற்றும் குட்டியின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது எனப் பாதுகாப்பு அதிகாரி எசார் மீரசாஹிபு தெரிவித்தார்.

குறித்த மனிதாபிமானமிக்க செயலைப் புரிந்த சாரதியை, ரயில் நிலைய அதிபர் தொடக்கம் அப்பிரதேச மக்களும் பாராட்டியுள்ளனர்.



# சிறுவர்களுடைய பாதுகாப்புக் குறித்து திருகோணமலையில் கலந்துரையாடல்

(ஹஸ்பர்)

சிறுவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அனைவரும் அக்கறையுடன் செயற்படவேண்டும் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மற்றும் மாவட்ட செயலாளருமான பி.எச்.என். ஜயவிக்ரம வலியுறுத்தினார்.

மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

பிரதேச செயலக ரீதியாக சிறுவர்களது நலன்கள் மற்றும் தேவைப்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்படல் வேண்டும். சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படல் தொடர்பான சம்பவங்கள் மாவட்டத்தில் பதிவாகின்றன. இதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை முற்றாக இல்லா தொழிக்கும்வகையில்பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயற்படல் இன்றியமையாதது. சிறுவர்கள் வாழ்வதற்குரிய நல்ல ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அதன் மூலம் அவர்களை நாட்டுக்கு வேண்டிய பிரஜைகளாக மாற்றியமைக்க முடியும் என அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியை இடைநடுவில் கைவிட்ட 430 மாணவர்கள் காணப்படுகின்றனர். இவர்களை மீளப் பாடசாலைகளில் இணைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இதன்போது கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் பல சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமங்கள், இளவயதுத்திருமணங்கள், சிறுவர்களை வேலைக்கமர்த்தல், போதைப்பொருள் பாவனை, வீட்டு வன்முறை, பிள்ளைகளைசுமந்தவண்ணம் யாசகமெடுத்தல், சிறுவர் போஷாக்கு, விசேட தேவையுடையவர்களின் நலன்சார் விடயங்கள், சிறுவர் கல்வி, சிறுவர் சுகாதாரம்உட்படபலவிடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

சிறுவர்களோடு தொடர்புபட்ட அனைத்து நிறுவனங்களும் தனித்தனியாக செயற்படுவதை விடக் கூட்டாக ஒருங்கிணைந்து நீண்டகால, குறுங்கால திட்டங்களை வடிவமைத்து செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இதன்போது அரசாங்க அதிபர் வலியுறுத்தினார்.

அத்துடன்சிறுவர்களுக்குரிய விடயங்களுடன் தொடர்பான தெளிவூட்டல்களை வலயக் கல்வி பணிமனையுடன் இணைந்து எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டியதன் அவசியப்பாடு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஒலுவிலில் டெங்குப் பரவலை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை







அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் அதிகமான டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டமையையடுத்து, டெங்கு நுளம்பு பெருகுவதை தடுக்க புகை விசுறும் நடவடிக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில், இரு வார காலத்திற்குள் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமையையடுத்து, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக ஒருங்கிணைந்த பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகள், அரச, தனியார் நிறுவனங்கள், மதஸ்தாபனங்கள் உட்பட டெங்கு பரவும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் புகை விசுறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். கிணறுகளில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் உருவாகாமல் தடுப்பதற்கு மருந்துகள் இடப்பட்டு வருகின்றன எனவும், குடிதண்ணீர்க் கிணறுகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் பொருட்டு மீன் குஞ்சுகள் இடும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய வகையில் பராமரிப்பின்றி இடங்களை வைத்திருப்பவர்களுக்கெதிராக நீதிமன்றின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்படுமெனவும் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எம். இஸ்மாயில் மேலும் தெரிவித்தார்.

# மேற்கத்தேய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு கட்டுப்படுவதிலிருந்து நாடு விடுபட வேண்டும்

## அரசிடம் விமல் வேண்டுகோள்



சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை மாத்திரம் எதிர்பார்த்து, எமக்கு உதவக்கூடிய ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்காமலிருப்பது பொருத்தமற்றது.

எனவே மேற்கத்தேய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு மாத்திரம் கட்டுப்படுவதிலிருந்து விடுபட அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்பதோடு, ரஷ்யாவுக்கு பலமிக்க தூதுக்குழுவொன்றை அனுப்பி உதவிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

எமது நாடு நெருக்கடிக்குள்ளாகும் போது ரஷ்யா பல சந்தர்ப்பங்களில் உதவியுள்ளது. அதற்கமைய ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் மற்றும் எரிவாயுவை நிவாரண அடிப்படையில் பெற்றுக் கொள்வது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் கட்சிகளின் தலைவர்கள் இலங்கைக்கான ரஷ்ய தூதுவருடன் பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம்.

இதன்போது, ரஷ்யாவுடன் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் வணிக ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் ஒத்தி வைக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் தூதுவர் எம்மிடம் சுட்டிக்காட்டினார். இலங்கை – ரஷ்ய ஒப்பந்தம் முறையாக முன்னெடுக்கப்பட்டிருந்தால் அதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொண்டிருக்க முடியும்.

அத்தோடு அண்மையில் ரஷ்ய விமானமொன்றை தடுத்து நிறுத்தியமை தொடர்பில் தாம் அதிருப்தியடைந்துள்ளோம் எனவும், இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து 50 சதவீதமான சுற்றுலாப் பயணிகள் பிறிதொரு விமான சேவையையே பயன்படுத்துகின்றனர் எனவும் தூதுவர் இதன் போது குறிப்பிட்டார்.

மேற்படி விமான சேவையை மேற்கொள்வதெனில் இலங்கையிலிருந்து இதுதொடர்பான உறுதியான சான்றிதழ் ஒன்று தேவையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எமது ஜனாதிபதி, ரஷ்ய ஜனாதிபதியுடனும் நேரடியாகக் கலந்துரையாட வேண்டும் என்பதோடு, இலங்கையிலிருந்து பொருத்தமான தூதுக்குழுவொன்றை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் ரஷ்ய தூதுவர் எம்மிடம் வலியுறுத்தினார்.

ரஷ்யாவிலிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதாயின் அந்நாட்டு நாடாளுமன்ற சட்டங்கள் அதனை அனுமதிக்க வேண்டும். எனினும் மனிதாபிமான அடிப்படையில் கடன் திட்டத்தின் கீழ் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் வினவிய போது, அது சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலுக்கு பாதகமாக அமையும் என்று குறிப்பிட்டார். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஏதேனும் கிடைக்கும் என எதிர்பார்த்துக்கொண்டிருப்பதன் மூலம் வரிசைகளுக்கு தீர்வுகாண முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் எனக் கருதி, எமக்கு தயாராகவுள்ள ஏனைய நாடுகளை நாடாமல் இருப்பதன் ஊடாக எவ்வாறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது? எனவே எமக்கு உதவக்கூடிய ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுடன் பேச்சுகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அவ்வாறில்லை எனில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களே அனைத்துக்கும் பொறுப்புக் கூற வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவிக்காக எமக்கு எப்போதும் உதவி செய்யும் நாடுகளுடனான உறவை முறித்துக் கொள்ளக்கூடாது.

மேற்கத்தேய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு மாத்திரம் கட்டுப்படுவதிலிருந்து விடுபட முயற்சிக்கவேண்டும். எனவே, ரஷ்யாவுக்கு பலமிக்க தூதுக்குழுவொன்றை அனுப்பி எமது பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தி, அவர்களிடம் உதவிகளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

# மனைவியை வெட்டிய கணவன்

திருகோணமலை-செல்வநாயகபுரம் பகுதியில்கணவர்தன்னுடைய மனைவியின் கழுத்தை கத்தியால் வெட்டியுள்ளார். படுகாயமுற்ற நிலையில் மனைவி திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் திருகோணமலை-செல்வநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த முப்பது வயதுடைய இளம் பெண் எனவும் தெரியவருகின்றது.

குடும்பத் தகராறு காரணமாக கணவர் மது போதையில் வந்து மனைவியின் கழுத்தைக் கத்தியால் வெட்டினார் எனக் கூறப்படுகின்றது.

காயமுற்ற நிலையில் மனைவி அயலவர்களால் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டார். இதேவேளை பிரதேசமக்கள் மனைவியைக் கத்தியால் வெட்டிய கணவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆசிரியர்களை மதிக்காத சமூகத்துக்கு ஏன் அவர்கள் சேவையாற்ற வேண்டும்?

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் காட்டம்

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு சமூகத்தின் விளக்குகள். தயவு செய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

தற்போது நாட்டில் உள்ள சூழ்நிலை எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் ஆசிரியர்களின் கடமையும் அவர்கள் ஆற்றும் பணியும் வித்தியாசமானது. இந்நிலையில் எரிபொருளுக்காக ஆசியர்களைக் காக்க வைப்பதும் அவர்களோடு அநாகரிகமாக நடந்து கொள்வதையும் ஏற்க முடியாது. சமூகத்தில் உள்ள குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் கல்வியூட்டி அவர்களைப் பெரியவர்களாக்கும் ஆசிரியர்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அவமானப்படுத்துவதும் புறக்கணிப்பதும் அநாகரிகமானது.

ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு சமூகத்தின் விளக்குகள். தயவு செய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வுகாண வேண்டும்.

கைகூப்பி வணங்கவேண்டிய ஆசிரியர்களை கைகாட்டி மெருட்டும் அளவிற்கு வைக்காதீர்கள். அது ஒட்டுமொத்த சமூகத்துக்கும் கேடாகும். இத்தகைய நிலை தொடருமாக இருந்தால் ஆசிரிய பணியில் இருந்து ஒதுங்கவேண்டிய நிலை ஏற்படும்.

கிளிநொச்சியில் ஓர் ஆசிரியை விட்ட கண்ணீர் ஒட்டுமொத்த ஆசிரியர்களும் விட்ட கண்ணீருக்குச் சமமானது. – என்று உள்ளது.

# யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு சந்தையை பார்வையிட்ட உலக வங்கி அதிகாரிகள்



உலக வங்கியின் நிதியுதவியில் கட்டப்படும் கல்வியங்காடு பொதுச் சந்தை தொகுதி கட்டுமானப் பணிகளை உலக வங்கியின் அதிகாரிகள் நேற்று (புதன்கிழமை) பார்வையிட்டனர்.

சந்தை தொகுதிக்கு சென்ற உலக வங்கியின் அதிகாரிகள் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டமையுடன் மேற்கொண்டு செய்ய உள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இதன்போது வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.06.2022இல் வெளியிடப்பெற்றது.